Source: *Tamil Murasu,* p2
Date: 20 July 2016

திரு நாதனுக்கு தலைசிறந்த தெற்காசியர் விருது

சிங்கப்பூரின் முன்னாள் அதிபர் எஸ் ஆர் நாதனுக்கு 'புலம்பெயர் தெற்காசியர்களில் தலைசிறந்த உறுப்பினர்' என்ற விருது வழங்கி கௌரவிக்கப்பட்டுள்ளது.

சிங்கப்பூரில் இரண்டு நாட்கள் நடைபெற்ற தெற்காசிய புலம் பெயர்ந்தோர் மாநாட்டின் முதல் நாளான திங்கட்கிழமை இரவு நடைபெற்ற விருந்து நிகழ்ச்சியில் அந்த விருது வழங்கப்பட்டது.

முன்னாள் அதிபர் எஸ் ஆர் நாதன் நேரில் விருதைப் பெற்றுக் கொள்ள முடியாததால் அவரது பேரன் கிரன் சியோங் அந்த விருதை பிரதமர் லீ சியன் லூங் கிடமிருந்து பெற்றுக் கொண்டார்.

திரு நாதனின் ஏற்புரையை அவரது பேத்தி மோனிஷா சியோங் வாசித்தார்.

"இந்த விருது எனக்கு அளிக்கப்பட்டாலும் இந்த கௌர வத்திற்கு முழுச் சொந்தக்காரர் காலஞ்சென்ற நமது முன்னாள் பிரதமர் திரு லீ குவான் இயூதான். அவர்தான் 'புலம்பெயர் இந்தி யர்கள்' என்ற சிந்தனைக்கு வித் திட்டவர்," என்றார் திரு நாதன்.

தாம் அதிபரான பிறகு திரு லீயுடன் நடத்திய ஓர் உரை யாடலில் சிங்கப்பூர் மரபுடைமையின் ஓர் அங்கமான பண்டைய நாகரி கங்கள் பற்றிப் பேசியதாகவும் அப் போதுதான் புலம்பெயர் இந்தி யர்கள் என்ற சிந்தனை உதித்த தாகவும் அவர் நினைவு கூர்ந்தார்.

இரு பெரும் நாகரிகங்களான சீனாவுக்கும் இந்தியாவுக்கும் சிங்கப்பூரர்கள் நிறைய நன்றிக் கடன்பட்டிருக்கிறார்கள் என்று கூறிய திரு லீ, சீனர்களைப் பற்றித் தமக்கு நன்கு தெரிந்திருந் தாலும் இந்திய நாகரிகத்தைப் பற்றி நூல்களில் மட்டுமே படித் திருப்பதாகவும் கூறினார்.

"திறமையான இந்தியர்கள் இந்தியாவிலேயே இருப்பதற்குப் பதில் பெரும் எண்ணிக்கையில் அமெரிக்காவுக்கும் ஐரோப்பாவிற் கும் செல்வதையே விரும்புகின்ற னர். இவ்வாறு இந்தியர்கள் புலம் பெயர்வது தொடர்ந்து அதிகரிப் பதால் புலம்பெயர் இந்தியர்களைப் பற்றிய தகவல்களைத் திரட்டவும் அவர்களை சிங்கப்பூரில் கூடச் செய்யும் வழிகளை ஆராயும்படி யும் என்னைக் கேட்டுக்கொண்டார் திரு லீ," என்றார் திரு நாதன்.

அவ்வாறு உதித்ததுதான் புலம் பெயர் தெற்காசியர் மாநாடு என்ற திரு நாதன், தாழ்மையுடன் இந்த விருதைப்பெற்றுக்கொள்வதாகவும் கூறினார். புலம் பெயர்ந்த தெற் காசியர் மாநாட்டின் இரவு விருந்து நிகழ்ச்சியில் சுமார் ஆயிரம் பேர் கலந்துகொண்டனர்.



முன்னாள் அதிபர் எஸ் ஆர் நாதனுக்கு வழங்கப்பட்ட தலைசிறந்த தெற்காசியர் விருதை அவரது பேரன் கிரன் சியோங் (இடமிருந்து 2வது), பிரதமர் லீ சியன் லூங்கிடமிருந்து பெற்றுக் கொண்டார். உடன் தெற்காசிய ஆய்வுக் கழகத்தின் தலைவரும் வெளியுறவு அமைச்சின் பொதுத் தூதருமான திரு கோபிநாத் பிள்ளை (இடம்). திரு நாதனின் பேத்தி மோனிஷா சியோங் (வலம்). **படம்: தெற்காசிய ஆய்வுக் கழகம்**

Source: Tamil Murasu © Singapore Press Holdings Ltd. Permission required for reproduction.